**வ/ப களுபோவிட்டியான டீ பெக்டரி லிமிட்டெட் - 2023/2024**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப களுபோவிட்டியான டீ பெக்டரி லிமிட்டெட்டின் ("கம்பனி") 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தக்கங்களை தவிர்த்து, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் அவசியமான அல்லது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் நீங்கலாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்படக்கூடாத போதிலும், கம்பனியால் செலுத்த வேண்டிய செலவினம் மற்றும் முற்பணங்கள் மற்றும் முற் கொடுப்பனவுகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டு ரூபா 22,488,718 பெற வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் ஏனைய பேரேட்டுக் கணக்குகள் Olax மென்பொருளின் AP மொடியுலின் ஊடாகவே தயாரிக்கப்படுகின்றன. மென்பொருள் கட்டமைப்பின் குறைபாடு காரணமாகவே வேறுபாடு உருவாகியுள்ளது. தற்போது Olax நிறுவனத்தின் ஊடாக திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்படாத வகையில் நிதிக்கூற்றுக்களினுள் கணக்கு மீதிகள் முன்வைக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 1,490,504 தொகையான மீள அனுப்பிய இருப்பு மற்றும் இருப்பு பற்றாக்குறைகள் கம்பனியின் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் கடன் பட்டோர் அந்த அளவினால் மிகைப் பெறுமதியாகியுள்ளனர். | கடன் பட்டோர் மீதியை திருத்துவதற்கு எதிர்வரும் நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | மீள அனுப்பப்பட்ட இருப்பு மற்றும் இருப்பு பற்றாக்குறைகள் சரியாக கணக்குகளின் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இறுதி தேயிலை பொதியிடல் பொருட்கள் அச்சீட்டு மாதிரிகளை தயாரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,833,151 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபபகரணங்களின் கீழ் சொத்தொன்றாக இனங்காணப்படாது முன்னோக்கிய செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் | எதிர்வரும் நிதியாண்டின் போது சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை சரியான தொகுதியின் கீழ் இனங்கண்டு கணக்குகளினுள் சீராக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | அந்த அளவினால் நடைமுறை சொத்துக்கள் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்ததுடன், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தேரூங்கல தேயிலை தொழிற்சாலையின் இறுதி தேயிலை இருப்பு உள்ளடங்களாக காணப்பட்ட கிரயம் ரூபா 8,243,040 பெறுமதியுடைய 5,228 கிலோ கிராம் தேயிலையை கழிவுத் தேயிலையாக இனங்கண்டு இறுதி தேயிலை இருப்பிலிருந்து அகற்றுவதற்கு 2024 திசெம்பர் மாதம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், நிலவும் கணக்காய்வு சான்றுகளின் பிரகாரம் இந்த கழிவுத் தேயிலை இருப்பு 2024 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இறுதி தேயிலை இருப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களினுள் அறிக்கையிடப்பட்டுள்ள ரூபா 31,593,130 தொகையான தேரூங்கல தேயிலை தொழிற்சாலையின் இறுதி தேயிலை இருப்பின் சரியானதன்மை சந்தேகத்திற்குரியதாக காணப்பட்டது. | இது தொடர்பில் திட்டவட்டமான பதிலை வழங்க முடியாதுள்ளதுடன், மேற்கொள்ளப்படும் உள்ளகப் பரிசோதனை நிறைவடைந்ததும் திட்டவட்டமாக அறிவிக்க முடியும். | ஐந்தொகை திகதியில் இருப்பின் பௌதீக மெய்மையாய்வினை சரியாக இனங்கண்டு மீதிகள் கணக்குகளினுள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக்கடன் ஒதுக்கங்களுக்கான கணக்கீட்டு கொள்கை கம்பனியில் காணப்படாத போதிலும், ரூபா 1,846,032 தொகையான ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்த கணக்கின் மீதி மாற்றமின்றி காணப்பட்டது. | கம்பனியின் ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக்கடன் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,846,032 தொகையான பெறுமதியுடைய மீதியானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று எதிர்வரும் நிதியாண்டின் போது கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக்கடன் சீராக்கங்களுக்கு உரிய கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு, அதற்கமைய கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் பச்சை தேயிலை வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணத் தொகைகளுக்கு உரியதாக ஈடுசெய்யப்படாத ரூபா 423,761 தொகையான பெற வேண்டிய மீதிகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், இது தொடர்பில் ஒவ்வொரு மாதத்திலும் கடன் பட்டோர் மீதியை அறவீடு செய்தல் தொடர்பில் கூட்டமொன்றை நடாத்தி செயன்முன்னேற்ற மீளாய்வொன்று மேற்கொள்ளப்படுகின்றது. கொழுந்து கொண்டு செல்லும் இரு முகவர்களுக்கு தற்போது அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. | உரிய முற்பணத் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு அல்லது அதற்காக தேயிலை வழங்குந்களின் தேயிலை கொழுந்து பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகிதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | கம்பனியின் மனிதவள முகாமைத்துவம் உட்பட செயற்பாட்டு நடைமுறை மற்றும் கட்டுப்பாடு தொடர்பான செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வரைபாக்கப்பட்ட நிர்வாகக் கையேடொன்று பொது திணைக்களத்தில் உரிய நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயல்வழிக் கையேட்டிற்கான அங்கிகாரம் பெறப்படுதல் மற்றும் அதன் பிரகாரம் நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப் படுதல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 யூன் 13 ஆந் திகதிய 257/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை | மெணிக்திவெல தேயிலை தொழிற்சாலையின் ஆண்டிறுதி தேயிலை இருப்பு மெய்மையாய்வின் பின்னர் தொழிற்சாலையின் இறுதி தேயிலை இருப்பில் | எதிர்காலத்தில் இவ்வாறான உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை இருப்பினுள் அசாதாரணமாக நிராகரிக்கப்பட்ட | சுற்றறிக்கை வழிகாட்டல்களுக்கு இணங்க உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்தின் அடிப்படையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளடக்கப்பட்டுள்ள தேயிலை ஏலத்திற்கு அல்லது உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய நியமத்தை அண்மிக்காத ரூபா 5,358,333 பெறுமதியான 4,460 கிலோ கிராம் கழிவுத் தேயிலையாக பெயரிடப்பட்ட தேயிலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் கணக்காய்வு குழுவிற்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட்டு உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேயிலை உள்ளடக்கப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவ்வாறானதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் கணக்காய்வுக் குழுவின் ஊடாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேயிலை இருப்பு தொடர்பாக செயற்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (இ) | 2022 பெப்ரவரி 18 ஆந் திகதிய 239/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (ஐ) ஆம் பந்தி | தேயிலை விற்பனை நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட 30 நாட்கள், 60 நாட்கள் மற்றும் 90 நாட்களுக்கு மேற்பட்ட பணம் கிடைக்காத விற்பனைகளை துரிதமாக அறவிடுவதற்கு உதவி முகாமையாளர் (விற்பனை) மற்றும் முகாமையாளர் (நிதி) இனால் பொறுப்பாக செயற்பட வேண்டிய போதிலும், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமுடைய தேயிலை பக்கற்றுகளின் விற்பனை மூலம் பெற வேண்டிய ரூபா 1,837,152 தொகையான விற்பனைப் பணம் கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன, மேலும் அந்த அறிக்கைகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக நிர்வாக அதிகாரிக்கு அனுப்பப்பட உள்ளன. ஒரு வருடத்திற்கும் மேலாக பராமரிக்கப்படும் பிற நிலுவைத் தொகையை உடனடியாக வசூலிக்க தொடர் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றறிக்கை வழிகாட்டுதல்களின்படி, நீண்டகால நிலுவைத் தொகையைப் பராமரிப்பதைத் தவிர்க்கவும், ஏற்கனவே உள்ள நிலுவைத் தொகையைத் தீர்க்கவும் பொறுப்பான தரப்பினர் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் வரிக்கு பின்னரான தேறிய இலாபம் ரூபா 55,574,507 ஆக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் வரிக்கு பின்னரான தேறிய இலாபம் ரூபா 220,800,775 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 165,226,268 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது முடிவுத் தேயிலை விற்பனை வருமானம் ரூபா 845,922,552 இனால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் கழிவுத் தேயிலை விற்பனை வருமானம் ரூபா 18,534,701 இனால் வீழ்ச்சியடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக கம்பனியின் விற்பனை வருமானம் 32 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதுடன், இந்த குறைவிற்கு ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலையின் விற்பனை வருமானம் 31 சதவீதத்தினால் குறைவடைந்தமை மற்றும் கழுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலையின் விற்பனை வருமானம் 34 சதவீதத்தினால் குறைவடைந்தமை தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. அவ்வாறே நிலையான வைப்பு வட்டி வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக அதிகரித்தமை காரணாக மீளாய்வாண்டின் போது நிதி வருமானம் 64 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. செலவின பிரிவுகளின் பகுப்பாய்வின் போது விற்பனை மற்றும் பகிர்ந்தளிப்பு செலவினம் 225 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் 5:1 மற்றும் 3:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதங்கள் 4:1 மற்றும் 2:1 ஆக காணப்பட்டன. மிகை செயற்பாட்டு மூலதன நிலைமையின் காரணத்தால் இந்த விகிதங்கள் உச்ச பெறுமதியை விட கூடிய பெறுமதியை கொண்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ள 4.075 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியில் 0.802 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி 1989 மற்றும் 1996 காலப்பகுதி முதல் 15 அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகளை ரத்து செய்து, களுபோவிட்டின தொழிற்சாலையிடமிருந்து குறித்த நிலத்தை கையகப்படுத்துமாறு பிட்டபெத்தர பிரதேச செயலாளரிடம் | சட்டப்பூர்வ உரிமை சரிபார்ப்புகளை நடத்திய பின்னர், சட்ட நடவடிக்கைகள் மூலம் நிலத்தின் உரிமையை தீர்த்து வைக்க தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் அவர்களை அகற்றி காணியை தீர்ப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஹினிதும ஹில்ஸ் மற்றும் மெனிக்திவெல தேயிலை தொழிற்சாலை ஆகியவை முறையே 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கம்பனிக்கு தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டதுடன், கம்பனியால் தேயிலை சக்தி நிதியத்திற்கு 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி ரூபா 50 மில்லியன் கடன் தொகையும் வழங்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் 19 ஆந் திகதிய அமப/19/0743/117/024 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம்இந்த தொகை மற்றும் உரிய வட்டிக்காக ஹினிதும மற்றும் மெனிக்திவெல தேயிலை தொழிற்சாலைகளின் உரித்தினை சட்டரீதியாக கம்பனிக்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த தொழிற்சாலைகளின் சட்டரீதியான உரித்து சாட்டப்பட்டிருக்கவில்லை. | ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலை அமைந்துள்ள காணியை கம்பனிக்கு மாற்றுவதற்கு காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு எழுத்துப்பூர்வ கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் மாகாண காணிகள் ஆணையாளரினால் மெனிக்திவெல தொழிற்சாலை அமைந்துள்ள நிலத்தை கம்பனிக்கு மாற்றுவதற்கு தேவையான பரிந்துரையை காணிகள் ஆணையர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சரவையின் முடிவின்படி, தேயிலை தொழிற்சாலைகளின் உரிமையை நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை மீளாய்வாண்டின் போது ரூபா 146.05 மில்லியன் இலாபமொன்று அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது கடந்த வருடத்தில் அறிக்கையிடப்பட்ட ரூபா 360.73 | தேயிலை விற்பனை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, உற்பத்தி செலவு அதிகரிப்பு மற்றும் தேயிலை இலைகளின் தரம் குறைதல், இறுதி தேயிலையின் சதவீதம் | தேயிலைத் கைத்தொழிலுடன் தொடர்புடைய தற்போதைய உள்ளக மற்றும் வெளிப்புற சுற்றுச்சூழல் காரணிகளை முறையாக ஆய்வு செய்து |

| | | |
|---|---|---|
| மில்லியனுடன் ஒப்பிடும் போது 60 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. ஹினிதும ஹில்ஸ் தேயிலை தொழிற்சாலையும் கடந்த வருடத்தில் நிலவிய ரூபா 1.33 மில்லியனான இலாபத்தன்மைக்காக ரூபா 30.89 மில்லியனான நட்ட நிலைமையொன்று அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், தேருங்கல, மெனிக்திவெல மற்றும் பத்தரமுல்ல விற்பனை நிலையத்திலும் முறையே ரூபா 24.15 மில்லியன், ரூபா 35.22 மில்லியன் மற்றும் ரூபா 1.27 மில்லியனான நட்டங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. | குறைதல், இப்பகுதியில் உள்ள போட்டி நிறைந்த தனியார் தேயிலை தொழிற்சாலைகள் தேயிலை கொழுந்தின் விலைக்கு கூடுதல் பணம் செலுத்தி தேயிலை கொழுந்தினை பெற்றுக்கொள்ளல், நியாயமான முறையின்படி செலுத்தக்கூடியதை விட தேயிலை கொழுந்தின் விலைக்கு எங்கள் தேயிலை தொழிற்சாலை கூடுதல் பணம் செலுத்த வேண்டியுள்ளமை ஆகியன இந்த விலை வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்துள்ளது. | தேயிலை தொழிற்சாலைகளை இலாபகரமாக நடாத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கம்பனி எடுக்க வேண்டும். |

### 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழிற்சாலைகளை புதிய தொழில்நுட்பத்திற்கு மாற்றியமைப்பதற்கு அரச மானியங்களாக 2021 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு ரூபா 18,204,900 கிடைத்திருந்த போதிலும், அவற்றுள் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளிடையே CTC வெட்டிகளைக் கூர்மைப்படுத்துவதற்கான கணினிமயமாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் 02 CTC தேயிலை தர நிர்ணய இயந்திரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிறுவுதல் ஆகியவை 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்படாமையால் ரூபா 7,620,900 மானியம் கம்பனியில் எஞ்சியிருந்தது. | சம்பந்தப்பட்ட இயந்திரங்களை வழங்குவதற்காக வழங்குநரால் 70% முன்பணம் கோரியிருந்ததுடன், எவ்வாறான போதிலும் விலைக்கேள்வி ஆவணத்தில் கோரப்பட்ட முன்பணம் 30% எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்புக்கொண்டபடி இயந்திரங்களை வழங்குமாறு வழங்குநருக்கு பல சந்தர்ப்பங்களில் எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, வழங்குநருக்கு 2024.07.29 ஆந் திகதியும் எழுத்துப்பூர்வமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், | அரசாங்க மானியங்களை திறம்பட தேயிலை தொழிற்சாலைகளை புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாற்றும் திட்டத்தை பயன்படுத்தி விரைவாக நிறைவுசெய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்குநர் இன்றுவரை பதிலளிக்கவில்லை. | |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழுபோவிட்டியான, தேருங்கல, ஹினிதும ஹில்ஸ் மற்றும் மெனிக்திவெல தேயிலை தொழிற்சாலைகளின் வருடாந்த பூர்த்தி தேயிலை உற்பத்தி இயலளவு ஆகியவை முறையே 1,440,000 கிலோ கிராம்கள், 576,000 கிலோ கிராம், 516,000 கிலோ கிராம் மற்றும் 300,000 கிலோ கிராம்களாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் முடிவு தேயிலை உற்பத்தி முறையே 858,881 கிலோ கிராம், 208,325 கிலோ கிராம், 109,986 கிலோ கிராம் மற்றும் 174,545 கிலோ கிராம்களாக காணப்பட்டமையால் தொழிற்சாலைகளின் இயலளவு குறைப்பயன்பாட்டுடன் 40 சதவீம் 79 சதவீதம் எனும் உயரிய பெறுமதியை கொண்டிருந்தது. | அதிக உரச் செலவுகள் மற்றும் போதுமான உரம் இடப்படாமை ஆகியவற்றால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு இலக்கிடப்பட்ட விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாமை, தொழிற்சாலைகளைச் சுற்றி பல தனியார் தொழிற்சாலைகள் அமைந்துள்ளதால் தேயிலை கொழுந்தினை பெற்றுக்கொள்வதில் கடுமையான போட்டி நிலவுகின்றமை போன்ற நியாயமான காரணங்களால் தொழிற்சாலையின் இயலுமை குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | புதிய மேலாண்மை உத்திகளைக் கண்டறிந்து ஏற்றுக்கொள்வதன் மூலம் முடிக்கப்பட்ட தேயிலை திறனை உகந்த நிலைக்கு அதிகரிக்க நிறுவனம் பாடுபட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தலைமை அலுவலகத்தின் 39 பதவிகள் நிலவிய போதிலும், அவற்றும் 21 பதவிகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தேயிலை | பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தேயிலை தொழிற்சாலைகளுக்காக பதவியணியின் 81 பதவிகள் அங்கீகரிக்கப்படடுள்ளது தொழிற்சாலை உச்ச | கம்பனியின் நோக்கங்களை அடைவதற்கும் அதன் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அத்தியாவசிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை |

| | | |
|---|---|---|
| தொழிற்சாலைகளுக்கான 81 பதவியணிகளில் 35 பதவி வெற்றிடங்கள் நிலவின. | இயலளவுடன் இயங்கும் சந்தர்ப்பதில் ஆகும். எனினும், உற்பத்தி இயலளவினை விட குறைவான இயலளவுடன் தொழிற்சாலைகள் இயங்குவதால் நிதிச் செலவினை குறைப்பதற்கு பிரதேசங்களில் தேயிலை கொழுந்தினை கொள்வனவு செய்யும் போது நிலவும் போட்டித்தன்மை காரணமாக கிடைக்கும் தேயிலை கொழுந்தின் அளவு குறைவடைகின்றமையால் நட்டத்தில் இருக்கும் தொழிற்சாலைகளில் நட்டத்தின் அளவைக் குறைக்க வேண்டிய அவசியம் காரணமாக, ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தொழிற்சாலைகளில் அத்தியாவசிய பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படும் போது, அந்த நேரத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |